மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது அந்தப் பகுதியிலே, தடிக்காரக் கோணத்தை ஒட்டியிருக்கிற முத்துக்குளி, மகேந்திரகிரி, பாலமூர், அப்பர் கோதையார் இது போன்ற அந்தப் பகுதிகளில் இப்பொழுது ஆய்வு வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, இப்படி ஆய்வு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதைப் பார்த்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆய்வுகளின் அடிப்படையிலே அவை வியாபார ரீதியிலே லாபகரமாக இருக்கும் என்றால் அரசு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

டெம்போ மற்றும் வான் வாங்கக் கடன் வழங்கும் திட்டம்.

*வினா எண் 1006—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (T.I.I.C.) டெம்போ, வான் முதலிய வாகனங்களை வாங்க கடன் வாங்கும் திட்டத்தை ஒரு லட்சம் ஜனத்தொகைக்கு குறைவான டவுன் பஞ்சாயத்து பகுதிகளுக்கும் விஸ்தரிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : ஒரு இலட்சத்திற்குக் குறைவான மக்கட் தொகை உள்ள நகரமாக இருந்தாலும், வாய்ப்பு உள்ள எல்லா நகரங்களிலும் "டெம்போக்கள்" மற்றும் "வான்கள்" முதலிய வாகனங்கள் வாங்கி ஓட்டுவதற்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் தகுதி அடிப்படையில் ஏற்கனவே கடனுதவி வழங்கி வருகிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, தொழில் முதலீட்டுக் கழகம், இப்படி வாகனங்கள், தொழிற்சாலைகளுக்கு இயந்திரங்கள் வாங்கக் கடன் வழங்கும் போது, புதியவைகளுக்கு மட்டும் கடன் வழங்குகிறது. ஆகவே, பழைய வாகனங்கள், பழைய இயந்திரங்களுக்குக் கடன் வழங்க அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய வாகனங்கள் வாங்குவதற்குக் கடன் வழங்குவதற்கான பரிசீலனை அரசிடத்தில் இப்பொழுது இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வழங்குகிற அது மாதிரியானக் கடன்களுக்கு என்ன வட்டி

1981 மே 6]

வீதத்தை வசூல் செய்து கொண்டிருக்கிறது? இதுவரை அந்த நிறுவனம் டெம்போ போன்ற வாகனங்கள் எத்தனை கொடுத்து இருக்கிறார்கள் என்ற விவரம் அமைச்சரிடம் இருக்கிறதா? இப்பொழுது சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு எல்லாம் இயந்திரங்கள் பொருத்துகிறார்கள். எல்லா ஊர்களிலும் தகுதியின் அடிப் படையிலும் அதற்கும் கடன் கொடுக்க, இந்தத் தொழில் முத லீட்டுக் கழகம் முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டி வீதம் 9 சதவீதம் என்று நினைக்கிறேன். என்னிடத்திலே இப்பொழுது சரியான புள்ளி விவரம் இல்லை. ஆனால், இப்படி கொடுக்கப்படுகிற அளவைக் கூட ஏற்கனவே, ரூ. 50,000 வரை, டெம்போ போன்ற டிரான்ஸ் போர்டு வாகனங்களை வாங்குவதற்கு, அதிகபட்சமாகக் கடன் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்; அந்த அளவைக்கூட புது வண்டிகள் வாங்குவதற்கு ரூ. 1 இலட்சம் வரை உயர்த்து வதற்கு இப்பொழுது உத்தேசம் இருக்கிறது. சைக்கிள் ரிக்ஷாக் களுக்கும்கூட கடன் வழங்குகிற அளவை உயர்த்தி, எல்லா மாவட்டங்களுக்கும் கொடுக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. கோ. விஸ்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் கடன் வாங்குவது என்பது மிகவும் சிரமமான காரியம் என்றும், நீண்ட நாட்கள் ஆகிறது என்றும் பெரிய இமாலய முயற்சியாக இருக்கிறது என்றும் போனவர்கள் எல்லாம் சொல்கிறார்கள். அந்த நாட்களை குறைப்பதற்கும் துரிதமாகக் கடன் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மட்டும் ஏறக்குறைய 30 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. அதுவும் மாவட்ட அளவில் பிராஞ்சு அளவிலே 50 ஆயிரம் ரூபாய்கள் கடன் வழங்க லாம் என்று மாண்புமிகு முதலமைச்சர், புரட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டு, அதன் அடிப்படையில் மாவட்ட அளவிலே 5 கோடி ரூபாய்கள் சென்ற ஓராண்டிலே மட்டும் கொடுக்கப்பட்டி ருக்கின்றது. அப்படி விரைவாகக் கடன் வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏதாவது சங்கடங்கள் இருந் தால் அதை கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. சி. சண்முகம்: தலைவர் அவர்களே, நகரப் புறங்களிலே மட்டும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கடன் வழங்குவதாகச் சொன்னார்கள். ஏன் அது கிராமப் புறங்களில் உள்ள மக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே அதை விரிவுபடுத்தக் கூடாது. இப்போது ஒரு இலட்சம் ரூபாயாக

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அதிகப்படுத்தப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அது எப்போதிலிருந்து நடைமுறையில் வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் தலைமை நிலையமான சென்னையில் இந்தக் கடன்கள் வழங்குவதாக இருந்த அதிகாரத்தை சென்ற ஆண்டுதான் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் மாவட்ட அளவில், பிராஞ்சு அளவில், அந்தக் கடன்கள் வழங்குகிற அதிகாரத்தை விஸ்தரித்து விரிவுபடுத்தினார்கள். எனவே கிராமங்களிலே கடன்கள் வழங்கப்படுகின்றன என்று முதலிலேயே சொன்னேன். சென்ற ஆண்டு 5 கோடி ரூபாய் அனைத்து மாவட்டங்களிலே கிராமப்புறங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. சிறு தொழில்கள் துவங்குவதற்கும், அதைப் போல டிரான்ஸ்போர்ட்டு வண்டிகள் வாங்குவதற்கும் வழங்கப் பட்டிருக்கிறது என்று சொன்னேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற நேரத்தில் தகுதி அடிப்படையில் கொடுப்பதாகச் சொன்னார்கள். என்ன தகுதி என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். மேலும் அரசியல் சாசனச் சட்டப்படி பின்தங்கியவர்கள், மலைவாழ் மக்கள் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய மக்களுக்கு, மாநில அரசு இஷ்டப்பட்டால் தனிச் சலுகை வழங்க இடம் உண்டு என்று அரசியல் சாசனச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் யாருக்காவது கொடுக்கப்பட்டிருக்கிறதா? கொடுக்கப்பட்ட 5 கோடியில் பின் தங்கிய மக்கள், நலிவுற்ற மக்கள், ஆதி திராவிட மக்களுக்கு ஏதாவது கொடுக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகிழ்ச்சி அடையத்தக்க விதத்திலே சென்ற ஆண்டுதான் தாழ்த்தப்பட்ட மக்கள் அவர்கள் சிறு தொழிலைத் துவங்க முன்வருவார்களேயானால், அவர்கள் எவ்வளவு முதலீடு கொண்டு வரவேண்டுமோ, அதிலே இருந்து அவர்களுக்கு விதிவிலக்குக் கொடுத்து, அவர்கள் அதிகமாகப் பெறுகிற வகையிலே உத்தரவிடப்பட்டிருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு துணைக் கேள்வி ....

Mr. SPEAKER: The question is on "Tempo" and so I wanted to create a little tempo. I cannot allow any more supplementary. Questions are over.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1981 மே 6]

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 10-00]

2. தகவல் கோரல்.

அ. உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் .

திரு. எஸ். ஆண்டித்தேவர் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். தமிழ்நாட்டில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆயிரக் கணக்கில் கைதாகிக் கொண்டு இருக்கிறார்கள். அது பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. 7, 8 ஒத்தி வைப்புத் தீர்மானங்களைக் கொடுத்துவிட்டு, எல்லாம் ஒரே நாளில் வர வேண்டுமென்றால் எப்படி முடியும் ?

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : தலைவரவர்களே, நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அது மறுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை எல்லாம் அவையிலே கேட்கக் கூடாது. என்னுடைய அறையிலே கேட்க வேண்டும்.

ஆ. அரசு அலுவலர்கள் போராட்டம்.

திரு. மு. அம்பிகாபதி : சார், பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். தலைவரவர்களே, இன்றைக்கு ஒரு கொந்தளிப்பான நிலைமை உருவாகி இருக்கிறது. அரசு அலவலர்கள் எல்லாம் இன்று ஒரு மணி நேரம் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது கொந்தளிப்பான நிலைமை இல்லை ; அவர்கள் போராட்டம் இன்றைக்கு இல்லை ; நீங்கள் அமைதியடையலாம்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, திரு. அம்பிகாபதி அவர்கள் சொல்வது, அந்த '' கான்பிரன்டேஷன் அவாய்ட்'' பண்ணப்பட வேண்டும். அதற்கு என்ன ....